தமிழ்க் கல்வி நிலையம் ஹோம்புஷ்

Tamil Study Centre Homebush Inc

www.tsch.org.au

# Mid Year
# Exam Papers 2011

Year 1 – Year 10

# அரையாண்டு
# பரீட்சைத்தாள்கள் 2011

தமிழ்க் கல்வி நிலையம்,ஹோம்புஷ்
**Tamil study Centre, Homebush Inc**
**P.O Box 4019, Homebush NSW 2140**
www.tsch.org.au

# அரையாண்டுப் பரீட்சை 2011

## வகுப்பு: KG

**திகதி: 18-06-2011,     நேரம்: இரண்டு மணித்தியாலங்கள்**

**ஆசிரியர்கள்:**

திருமதி ப. இராமகிருஷ்ணசுவாமி
திருமதி சா. மயூரன்

மாணவர் பெயர்:

___

**வினா 1 :  உங்கள் பெயரை எழுதுங்கள்**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | |

( 7  புள்ளிகள் )

**வினா 2 :  உயிர் எழுத்துக்களையும் ஆய்த எழுத்தையும் எழுதுங்கள்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | |
| | | | | | | | |

( 13 புள்ளிகள் )

**வினா 3 :  படங்களுக்குரிய சரியான சொல்லைத் தெரிந்து எழுதுங்கள்**

**சொற்கள்:**

அம்மா        அப்பா        ஆடு        ஊஞ்சல்        ஒட்டகம்



_______________________________________



_________________________________



____________________________________



______________________________________



_______________________________________-

( 40 புள்ளிகள் )


**வினா 4 :  வடிவங்களை அதற்குரிய சொல்லுடன் இணையுங்கள்**

( 20 புள்ளிகள் )


நீள்சதுரம்




வட்டம்



முக்கோணம்



சதுரம்



**வினா 5 : பார்த்து எழுதுங்கள்** (20 புள்ளிகள்)

அம்மா

| | | |
|---|---|---|
| | | |

ஆடு

| | |
|---|---|
| | |

இலை

| | |
|---|---|
| | |

வட்டம்

| | | | |
|---|---|---|---|
| | | | |

தமிழ்க் கல்வி நிலையம்,ஹோம்புஷ்
**Tamil study Centre, Homebush Inc**
**P.O Box 4019, Homebush NSW 2140**
www.tsch.org.au

# அரையாண்டுப் பரீட்சை 2011

## வகுப்பு: 1

**திகதி: 18-06-2011,        நேரம்: இரண்டு மணித்தியாலங்கள்**

**ஆசிரியர்கள்:**

**திருமதி க.வடிவேற்பிள்ளை**

**திருமதி கலா விக்னேஸ்வரன்**

**திருமதி கலைவாணி ஜெயராசா**

**மாணவர் பெயர்:**

**வினா 1 : உங்கள் பெயரை எழுதுங்கள். (6 புள்ளிகள்)**

______________________________________________

**வினா 2: தொடர்பு படுத்துக**

| | |
|---|---|
| குதிரை | இனிக்கும் |
| மாங்காய் | கனைக்கும் |
| வாழைப்பழம் | குரைக்கும் |
| உப்பு | புளிக்கும் |
| நாய் | உவர்க்கும் |

**(15 புள்ளிகள்)**

**வினா 3: பொருத்தமான சொல்லை எழுதுக.**

அப்பா, அம்மா, பாட்டி தம்பி, தங்கை, அக்கா

1. இவர் என் ______________________________





2. இவர் என் ____________________________



3. இவர் என் ______________________________



4. இவர் என் ______________________________



5. இவர் என் _______________________________



6. இவர் என் _______________________________

**(24 புள்ளிகள்)**

**வினா 4: படங்களுக்குப் பொருத்தமான சொற்களை இணைக்குக.**

வண்ணத்துப் பூச்சி




மாம்பழம்



மயில்



மல்லிகைப்பூ



நாய்



**(15 புள்ளிகள் )**

**வினா 5: வசனமாக ஒழுங்குபடுத்தி எழுதுக**

**1.** பெயர் | என் | கண்ணன்

________________________________________________

**2.** பச்சை | நிறம் | இலை

________________________________________________

**3.** எங்கள் | அழகானது | வீடு

________________________________________________

**4.** அக்கா | இவர் | என்

________________________________________________

**5.** மஞ்சள் | மாம்பழம் | நிறம்

________________________________________________

**(20 புள்ளிகள்)**

## வினா 6: மரியாதையாகக் கூறும் வார்த்தைக்கு நேரே x இடுங்கள்

படியுங்கள்________ வாருங்கள்_______

நீ _______________ ஓடு _____________

ஆடுங்கள்________ நில்லுங்கள்_______

அழு______________ வா________________

எடுங்கள்__________ படு ______________

**(20 புள்ளிகள்)**

தமிழ்க் கல்வி நிலையம்,ஹோம்புஷ்
**Tamil study Centre, Homebush Inc**
**P.O Box 4019, Homebush NSW 2140**
www.tsch.org.au

# அரையாண்டுப் பரீட்சை 2011

## வகுப்பு: 2

**திகதி: 18-06-2011, நேரம்: இரண்டு மணித்தியாலம்**

**ஆசிரியர்கள்:**

**திருமதி செல்வி ஜெயமனோகர், திருமதி கனகேஸ்வரி வனதேவா**

**மாணவர் பெயர்:**

**வினா 1 : கீழ் வரும் பந்தியை வாசித்து வினாக்களுக்கு விடை தருக.**

சுதா தொலைக்காட்சியில் படம் பார்த்துக் கொண்டு இருந்தாள். அது காட்டு மிருகங்களைப் பற்றிய படம். அப் படத்தில் யானைகள் கூட்டமாக ஆற்றில் குளித்தன. புலி ஒன்று மான் கூட்டத்தை துரத்திச் சென்றது. குரங்குகள் குட்டிகளுடன் மரத்தில் தாவிப் பாய்ந்தன. அப்போது மின்னல் மின்னியது. இடி இடித்தது. மழை பெய்த் தொடங்கியது.

1. சுதா என்ன செய்து கொண்டிருந்தாள்?

---

**2.** அப்படம் எது பற்றியது?

---

**3.** எவை கூட்டமாக ஆற்றில் குளித்தன?

---

**4.** எது மான் கூட்டத்தை துரத்திச் சென்றது?

---

**5.** அப்போது என்ன நடந்தது?

---

(15 புள்ளிகள்)

## வினா 2: சொல் ஆக்குக

| | | | | |
|---|---|---|---|---|
| பூ | சூ | வா | மி | பா |
| மா | ரி | ழை | ன் | டு |
| லை | ய | வ | ன | ம் |
| க | ன் | று | ல் | பு |

1________________________

2________________________

3________________________

4________________________

5_________________________

(15 புள்ளிகள்)

6________________________

7________________________

8________________________

9________________________

10_________________________

**வினா 3: சரியான எழுத்தை கொண்டு சொல் ஆக்குக.**

**1.** எ____ந்தேன்

**2.** இ____ப்பு

**3.** வெற்_____

**4.** கொடுத்____ன்

**5.** ____ச்சல்


| | | |
|---|---|---|
| | ழு | |
| னி | தே | றி |
| | நீ | |

(10 புள்ளிகள்)

வினா 4 :    பின்வரும் படத்தைப் பற்றி ஒரு வசனம் எழுதுக.











( 15 புள்ளிகள் )

**வினா 5: சோடி சேர்க்க.**

| | | |
|---|---|---|
| **1** | குருவிகள் | உதித்தது |
| **2** | பூக்கள் | கடலில் சென்றது |
| **3** | சிறுவர்கள் | பாடின |
| **4** | சூரியன் | மலர்ந்தன |
| **5** | கப்பல் | விளையாடினார்கள் |

(15 புள்ளிகள்)

**வினா 6: வசனம் அமைக்குக**

மலரும்| காலையில் | பூக்கள்

குடும்பம்| எங்கள் | இது

குடித்தபின் | பால் | படி

அமலன் | ஓடினான் | வகுப்புக்கு

ஆடும் | மயில் | அழகாக

( 10 புள்ளிகள் )

**வினா 7 : பின்வருவனவற்றில் ஒன்றைப்பற்றி மூன்று வசனத்திற்குக் குறையாமல் எழுதுக.**

**1** நான்

**2** எனது குடும்பம்

**3** எனது விடுமுறை

(20 புள்ளிகள்)

தமிழ்க் கல்வி நிலையம்,ஹோம்புஷ்
Tamil study Centre, Homebush Inc
P.O Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au

# அரையாண்டுப் பரீட்சை 2011

## வகுப்பு : 3

**திகதி: 18-06-2011, நேரம்: இரண்டு மணித்தியாலங்கள்**

**ஆசிரியர்கள்:**

**திருமதி நிர்மலா தயாளன்**

**DR மாலினி அனந்தகிருஷ்ணன்**

**திருமதி நித்தய லட்சுமி ரவீந்திரராஜா**

**செல்வி நிசாந்தி ரமணிதாசன்**

**மாணவர் பெயர்:**

______________________________

**வினா 1 : கிழே தரப்பட பந்தியை வாசித்து சரியான விடையை எழுதுக.**

என்பெயர் கண்ணன், கண்ணன் சுந்தரம். நான் கொழும்பில் எனது குடும்பத்துடன் வசிக்கிறேன். கொழும்பு இலங்கையின் தலைநகரம். நான் யாழ்ப்பாணத்தை சேர்ந்தவன். யாழ்ப்பாணம் இலங்கையின் வடபகுதியில் உள்ள ஒரு நகரம். நான் ஒரு தமிழன். என்னுடைய அம்மாவின் பெயர் சாவித்திரி. எனக்கு மூன்று சகோதரர்கள். ஓர் அக்கா, ஒரு தம்பி, ஒரு தங்கை. என் அக்காவின் பெயர் வனிதா. அவருக்கு 18 வயது. என்னிலும் 3 வயது அதிகம். என் தம்பி கபிலன், என்னிலும் 3 வயது இளையவன். தங்கை வாணி , 8 வயது. நாங்கள் எல்லோரும் கோயில் வீதியிலுள்ள 3ம் இலக்க வீட்டில் வசிக்கிறோம். என்னுடைய அம்மாவின் பெற்றோர்களும் எங்களுடன் தான் இருக்கிறார்கள். அக்கா கொழும்புப் பல்கலைக்கழகத்தில் படிக்கிறார். நான் வெள்ளவத்தையில் உள்ள உயர் பள்ளியில் படிக்கிறேன். எனது தம்பியும் தங்கையும் வெள்ளவத்தையில் உள்ள ஆரம்ப பள்ளியில் படிக்கிறார்கள். எங்கள் வீட்டில் 2 கணனிகள் உண்டு. நான் எனது அறையில் உள்ள கணனியில் விளையாடுவேன்.

**1.** கண்ணன் வசிக்கும் நகரம் எது?

---

**2.** கண்ணனின் வயது என்ன?

---

**3.** கபிலனின் வயது என்ன?

---

**4.** வனிதா எங்கே படிக்கிறாள்?

---

**5.** கண்ணனின் வீடு எங்கே இருக்கிறது?

---

**6** கண்ணனின் அம்மா எங்கே இருக்கிறார்?

---

**7.** இலங்கையின் தலைநகரம் எது?

---

**8.** கண்ணனின் வீட்டில் எத்தனைபேர் இருக்கிறார்கள்?

---

**9.** கன்ணனின் அப்பாவின் பெயர் என்ன?

---

**10.** கண்ணனின் அம்மாவின் பெயர் என்ன ?

---

(20 புள்ளிகள்)

**வினா 2 : சொற்களைக் கண்டு பிடியுங்கள்**

1. கல்வி __________________ __________________

2. கதைகள் __________________ __________________

3. ஆண்டவன் __________________ __________________

4. பலவகை __________________ __________________

5. வன விலங்கு __________________ __________________

***(10 புள்ளிகள்)***

**வினா 3 : வசனமாக ஒழுங்குபடுத்தி எழுதுக.**

**1.** பொழுது | எழுதுங்கள் | நேரம் | கடிதம் | கிடைக்கும்

______________________________________________________

**2.** புகையிரத | வருவார் | அப்பா| நிலையத்துக்கு

______________________________________________________

**3** கதைகள் | நல்ல | கேட்கலாம் | தாத்தாவிடம்

______________________________________________________

**4** விடுவார் | தேங்காயை | ஒருவர் | உருட்டி

______________________________________________________

**5** இங்கே | இல்லையா | போட்டிகள் | உங்களுக்கு

______________________________________________________

(15 புள்ளிகள்)

**வினா 4 : கோடிட்ட சொல்லின் எதிர்ச் சொல்லை பயன்படுத்துக.**

**1.** உலகத்தில் நல்லவர் இருப்பது போல் (பணக்காரர், வல்லவன், கெட்டவர்) சிலரும் இருக்கிறார்கள்.

**2.** (பொய்மை, வாய்மை, நன்மை) செய்யாவிட்டாலும் தீமை செய்யாமல் இருக்க வேண்டும்.

**3.** ஒரு பொருளை ஆக்குவது கடினம், அனால் அதை உடைப்பது (எளிது, அரிது, சிறிது).

**4.** ஆசிரியர் கேட்ட கேள்விக்கு, நான் உடனே (வினா, பதில், ஐயம்) கூறினேன்.

**5.** முதலாளி சொன்ன வேலையை (வியாபாரி, மாலுமி, தொழிலாளி) மறுக்காமல் செய்தான்.

(15 புள்ளிகள்)

**வினா 5. : பின்வருவனவற்றை எதாவது ஒன்றைப் பற்றி 5 சிறிய வசனங்கள் எழுதுக.**

1 பாடசாலையில் உள்ள அறைகள்

**2** உங்கள் குடும்பம்

**3** பாரம்பரிய விளையாட்டுக்கள்

(20 புள்ளிகள்)

**வினா 6: உங்களுடைய நண்பன்/நண்பி ஒருவருக்கு தமிழ்ப்பாடசாலையில் நடைபெற்ற கலைவிழாவைப் பற்றி சிறு கடிதம் ஒன்று எழுதுக.**

(20 புள்ளிகள்)

தமிழ்க் கல்வி நிலையம்,ஹோம்புஷ்
Tamil study Centre, Homebush Inc
P.O Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au

# அரையாண்டுப் பரீட்சை 2011

**வகுப்பு: 4, திகதி: 18-06-2011, நேரம்: இரண்டு மணித்தியாலங்கள்**

**ஆசிரியர்: திருமதி சிவசுப்பிரமணியம்**

**மாணவர் பெயர்:**

__________________________________________________

**வினா 1 : கிழே தரப்பட பந்தியை வாசித்து சரியான விடையை எழுதுக.**

கண்ணனும் பாலாவும் சிறு வயது முதல் நண்பர்களாக இருந்தனர். இருவரும் ஆரம்பக் கல்வியை தமிழ்ப் பள்ளியில் தொடங்கினார்கள். கண்ணன் ஒழுங்காகப் பாடசாலைக்குச் சென்றான். ஆசிரியர்கள் கொடுக்கும் பாடங்களை முறையாகச் செய்தான். ஆனால் பாலா படிப்பில் ஆர்வம் காட்டவில்லை. அவன் நேரத்தை விளையாடுவதிலும், ஊர் சுற்றுவதிலும் கழித்தான். கண்ணன் பல முறை நண்பனுக்கு புத்திமதி கூறினான். வகுப்பு ஆசிரியர்களும் பலமுறை அறிவுரை கூறினார். ஆனால் பாலா திருந்தவில்லை. காலம் செல்ல பாலா கெட்ட நண்பர்களுடன் சேர்ந்து தீய செயல்கள் செய்தான். அதனால் பாடசாலையில் இருந்து பாலா நீக்கப்பட்டான். அவனுடைய கல்வி தடைப்பட்டது. நாட்கள் சென்றன. கண்ணன் படித்து பட்டம் பெற்றான். அவன் ஒரு பெரிய தொழிற்சாலையின் நிர்வாகி ஆனான். நிறைய (ஊதியமும்) பணமும் கிடைத்தது.

ஒரு நாள் கண்ணன் தொழிற்சாலையைச் சுற்றி வந்தான். அப்போது அங்கே வேலைசெய்தவரைக் கண்டான். அவனை எங்கோ பார்த்தது போல் இருந்தது. ஆம் அவர் கண்ணனின் பாடசாலை நண்பர் பாலாதான். பாலா தன் நண்பன் கண்ணனின் நிலையைப் பார்த்து மகிழ்ச்சி அடைந்தான். பின் நான் கல்வியின் பெருமையை அறியாமல் நேரத்தை வீணாக்கினேன், அதனால் இன்று கஷ்டப்படுகிறேன். “ஏண்ணும் எழுத்தும் கண்ணெனத் தரும்” என்பதை இப்போது உணர்கிறேன் என்றான்.

**விடை தருக:**

**1.** சிறு வயது முதல் நண்பர்களாக இருந்தவர்கள் யார்?

______________________________________________

**2.** படிப்பில் அக்கறை காட்டியவன் யார்?

______________________________________________

**3.** பாலா பாடசாலை ஒழுங்குமுறைகளை மீறியதால் அவனுக்கு என்ன நடந்தது?

______________________________________________

**4.** கல்வியை எப்படிப் போற்ற வேண்டும்?

______________________________________________

**5.** ஒழுங்காக கல்வி கற்றதால் கண்ணனுக்கு என்ன நிகழ்ந்தது?

______________________________________________

6. ஒத்த சொல் தருக:

கல்வி ______________________

நண்பன் ______________________

பள்ளி ______________________

அருகில் ______________________

வேலை ______________________

(15 புள்ளிகள்)

**வினா 2: கோடிட்ட சொல்லுக்கு பொருத்தமான வேறு சொல்லை வைத்து எழுதுங்கள்.**

**1.** வாணியும் கண்ணனும் உரையாடினார்கள்

____________________________________________

**2.** கலாவைப் பார்தவுடன் வாணி குதூகலம் அடைந்தான்

____________________________________________

**3.** வாணி கலாவை அணைத்து முத்தமிட்டாள்

____________________________________________

**4.** இலகுவான முறையில் கணக்கை செய்

____________________________________________

**5.** விழாவின் ஆரம்ப உரை நன்றாக இருந்தது

____________________________________________

(15 புள்ளிகள்)

**வினா 3: பின்வரும் சொற்களை வைத்து மூன்று சொற்களுக்கு குறையாமல் வாக்கியம் அமைக்கவும்.**

**1.** வீட்டு வேலை

---

**2.** காலை உணவு

---

**3** மகிழ்ச்சி

---

**4** தொலைபேசி அழைப்பு

---

**5** பயந்து பயந்து

---

**6** வீரம்

---

**7** நண்பர்கள்

---

**8** நடனம்

---

(வினா 3 தொடர்ச்சி)

**9** கட்டுரை

---

**10** மாலை


---


(20 புள்ளிகள்)


**வினா 4: கதையை நிறைவு செய்யவும்**


காகம் ஒன்று தாகத்தை தவிர்க்க அங்கும் இங்கும் அலைந்ததது. அதற்கு தண்ணீர் கிடைக்கவில்லை. கடைசியில் ஒரு கிணற்றின் அருகில் குடம் ஒன்றைக் கண்டது.


(15 புள்ளிகள்)











5
EKR


6

**வினா 5 : நீர் உமது நண்பருக்கு, உமது பாடசாலை பற்றி கடிதம் எழுதுக**

(15 புள்ளிகள்)

**வினா 6: பின்வரும் எதேனும் ஒன்றைப் பற்றி <u>10 வசனங்களுக்குக்</u> குறையாமல் கட்டுரை எழுதுக**

**1.** நீர் உமது விடுமுறையை எவாறு கழித்தீர்

**2.** தைப்பொங்கல்

**3.** தமிழ் வளர்த்த பெரியார் : பாரதி, ஔவையார்

**4.** நீர் வாசித்து மகிழ்ந்த கதை ஒன்று

**5.** உமது பிறந்தநாள் அன்று நிறையப் பரிசுகள் கிடைத்தன, அவற்றைப் பிரித்துப் பார்க்கமுன், நீர் எண்ணிய கற்பனைகள் பற்றி.

**6.** உமது பொழுது போக்கு

(20 புள்ளிகள்)

தமிழ்க் கல்வி நிலையம்,ஹோம்புஷ்
Tamil study Centre, Homebush Inc
P.O Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au

# அரையாண்டுப் பரீட்சை 2011

## வகுப்பு : 5

திகதி: 18-06-2011, நேரம்: இரண்டு மணித்தியாலங்கள்

ஆசிரியர்கள்:

திருமதி ச. பாலகங்காதரன், திருமதி ம. தில்லைநடேசன்

மாணவர் பெயர்:

**வினா 1 : கிழே தரப்பட பந்தியை வாசித்து சரியான விடையை எழுதுக.**

மனிதனோடு தோழமையுடன் பழகும் விலங்குகளில் திமிங்கிலமும் ஒன்று. திமிங்கிலம் மிகவும் பெரியது. இது மீனைப்போன்ற வடிவம் உடையது. இதனுடைய எடை இருபத்தைந்து யானைக்கு சமமுடையதாக இருக்கும். இதனுடைய முகம் வெவ்வேறு வடிவத்தில் இருக்கும். உடம்போ உருண்டு திரண்டு நீளமாக காணப்படும். முன்புறமும் பின்புறமும் குவிந்திருக்கும்.

மனிதனுடைய கைகள் போல, இதற்கு முன்பக்கத்தில் துடுப்பு உள்ளது. திமிங்கிலம் நீந்தும்போதும் கவிழ்ந்து விழாதபடி அது உதவுகிறது. இதன் உடம்பில் முடியே கிடையாது. அதனால் இதன் தோல் கண்ணாடி போன்று வழுவழுப்பாக இருக்கும். இதன் தோலில் அடிப்புறத்தில் கொழுப்புத்தசை பரவலாக உள்ளது. எனவே தான் இதன் உடம்பின் வெப்பம் குறையாமல் இருக்கிறது. இதன் எலும்பின் சில பகுதிகள் தேன்கூடு போல் சிறு சிறு துளை கொண்டதாக இருக்கும். இவற்றில் எண்ணெய் நிறைந்திருக்கும். இதன் கழுத்துக் குட்டையானது. வெளிப்பாகத்தில் இதற்கு காது கிடையாது. ஆனால், ஒலியைக் கேட்கும் உறுப்பு உள்காதுடன் இணைந்துள்ளது. இதன் கண்கள் சிறியவை. அவை பக்கவாட்டில் இருக்கும். கடலடி நீர் அழுத்தம் தாங்கும் ஆற்றல் உடையவை.

இதன் கண்களின் மேற்புறத்தில் ஒரு சுரப்பி உள்ளது. அதிலிருந்து எண்ணெய் போன்ற திரவம் வெளிப்படும். அது கண்ணில் பரவும். அது உப்பு நிரால் கண் தொடாதபடி பாதுகாக்கிறது; கண்ணுக்குத் தெளிவான பார்வை தருகிறது.

**1.** திமிங்கிலம் மிகவும் கனமுடையது என்பதை எவ்வாறு அறியலாம்?

**2.** திமிங்கிலம் எவ்வாறு கவிழாமல் நீந்துகிறது?

**3.** திமிங்கிலத்தின் உடல் ஏன் வழுவழுப்பாக உள்ளது?

**4.** எப்படி திமிங்கிலத்தின் உடல் வெப்பம் குறையாமல் இருக்கிறது?

**5.** திமிங்கிலத்தின் கண் பழுதடையாமல் இருக்க காரணம் என்ன?

(20 புள்ளிகள்)

**வினா 2 : பின்வரும் சொற்களை வைத்து வாக்கியம் எழுதுக**

( 20 புள்ளிகள் )

ஆலயங்கள்

மன்னன்

சிற்பங்கள்

கடல்

திருவள்ளுவர்

உணவு

திருமணம்

இராமன்

உடற்பலம்

______________________________________________

______________________________________________

சூழ்ச்சி

______________________________________________

______________________________________________

**வினா 3: கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களை சரியான ஒழுங்கில் அமைத்து எழுதுக.**

1. விருந்தினர்களுடன் | கூடி | உண்டு | மகிழ்ந்தோம்

______________________________________________

2. தைப்பொங்கல் | தினத்தை | மகிழ்வாகக் | கொண்டாடினோம்

______________________________________________

3. முதலில் | வீட்டை | சுத்தம் | செய்தோம்

______________________________________________

4. சர்க்கரைப் | பொங்கல் | பொங்கினோம்

______________________________________________

5. சூரியனுக்கு | நன்றி | கூறிப் | படைத்தோம்

______________________________________________

(10 புள்ளிகள்)

**வினா 4: வசனமாக ஒழுங்குபடுத்தி எழுதுக.**

பின்வரும் வாக்கியங்களில் உள்ள எழுவாய், பயனிலை, செய்யப்படுபொருள் ஆகியவற்றை கண்டறிந்து கீழே உள்ள அட்டவணையில் எழுதுங்கள்.

1. தமிழர்கள் திருக்குறளைப் படிக்கவேண்டும்
2. பெற்றோர்கள் பிள்ளைகளை நன்கு பராமரிக்கின்றனர்
3. கிளி இனிமையாகப் பேசி பலரை மகிழ்விக்கின்றது
4. காட்டில் வாழும் மிருகங்களை வேடர்கள் பலர் வேட்டையாடினர்
5. கடுமையான புயல் வீசியதால் மரங்கள் வேரோடு சாய்ந்தன

| எழுவாய் | செயப்படுபொருள் | பயனிலை |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

(10 புள்ளிகள்)

**வினா 5: பின்வருவனவற்றுள் ஏதாவது ஒரு தலைப்பைத் தெரிவு செய்து 15 வசனங்களுக்குக் குறையாமல் எழுதுக.**

1. நீ கொண்டாடிய ஒரு விழா.
2. நீர் பார்த்து மகிழ்ந்து ஒரு திரைப்படம்
3. நான் வளர்க்கும் செல்லப்பிராணி
4. நான் படித்து மகிழ்ந்த கதை
5. சென்ற பாடசாலை விடுமுறையை கழித்த விதம்

(20 புள்ளிகள்)

**வினா 6: கடிதம் எழுதுக**

**1** உனது பிறந்தநாளுக்கு வருமாறு உனது நண்பனுக்கு / நண்பிக்கு ஒரு கடிதம் எழுதுக.

**2** வெளிநாட்டில் இருக்கும் உனது உறவினர் ஒருவர் உடல்நலம் இல்லாது இருக்கின்றார். அவரின் உடல்நலம் பற்றிக் கேட்டு ஒரு கடிதம் எழுதுக.

(20 புள்ளிகள்)

தமிழ்க் கல்வி நிலையம்,ஹோம்புஷ்
Tamil study Centre, Homebush Inc
P.O Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au

# அரையாண்டுப் பரீட்சை 2011

## வகுப்பு : 6

**திகதி: 18-06-2011, நேரம்: இரண்டு மணித்தியாலங்கள்**

**ஆசிரியர்:**
**திருமதி தேவரதி குலராஜா**

**மாணவர் பெயர்:**

**வினா 1 : பின்வரும் உரைப்பகுதியை வாசித்து கீழேயுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

பெரும்பாலன மக்கள் உணவு உண்டபின் நற்சுகத்திற்காக பழங்களை உண்கிறார்கள். பழங்களில் ஊட்டசத்தும், உலோகச்சத்தும் மிகுதியாகக் காணப்படுகின்றன. வாழைப்பழம் எல்லாக் காலங்களிலும் இலகுவாகக் கிடைக்கும். சில காலங்களில் மாம்பழம் , பலாப்பழம் என்பன மலிவாகக் கிடைக்கும். பேரீச்சம்பழம் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யபடுகிறது. திராட்சைப்பழம் அதிக விலையுள்ளது. திராட்சைப்பழம் சிவப்பு, பச்சை நிறங்களில் இருக்கும். மேலும் மாதுளம்பழம், தோடம்பழம், பப்பாசிப்பழம் என்பனவும் உடல் ஆரோக்கியத்துக்கு உகந்த பழங்களாகும். அப்பிள்பழம் அவுஸ்திரேலியாவில் அதிகம் பெறக்கூடிய பழமாகும். நோயற்ற வாழ்க்கைக்கு நாளாந்தம் பழங்கள் உண்ணும் பழக்கம் வழியக அமையும். எமது உணவுப் பழக்கங்கள் உடலைப் பேணப் பெரிதும் உதவுகின்றன.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"

1. பழங்களில் அதிகம் காணப்படும் சத்துக்கள் எவை? (2 புள்ளிகள்)

________________________________________

2. எல்லாக் காலங்களிலும் கிடைக்கக்கூடிய பழம் எது? (2 புள்ளிகள்)

________________________________________

3. திராட்சைப்பழம் என்ன நிறங்களில் காணப்படும்? (2 புள்ளிகள்)

________________________________________

4. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் இக்கூற்றினை உமது நடையில் விளக்குக. (3 புள்ளிகள்)

________________________________________

________________________________________

5. எதிர்ச் சொற்கள் தருக (2 × 5 புள்ளிகள்)

இலகுவாக ______________________

மலிவு ______________________

இறக்குமதி ______________________

உள்நாடு ______________________

உடற்சுகம் ______________________

**வினா 2 : பின்வரும் சொற்கள் பெயராகவும், வினையாகவும் வர வாக்கியம் அமையுங்கள்.**

படி பெயர் ______________________________

வினை ______________________________

ஓடு பெயர் ______________________________

வினை ______________________________

ஊர் பெயர் ______________________________

வினை ______________________________

கரை பெயர் ____________________

வினை ____________________

மடி பெயர் ____________________

வினை ____________________

(20 புள்ளிகள்)

**வினா 3 : கீறிட்ட இடங்களில் "கண்ணன்" என்ற சொல்லுடன் பொருத்தமான வேற்றுமை உருபைசேர்த்து எழுதுங்கள்.**

____________________ ஒரு பொம்மைத் தொழிற்சாலையில் வேலை செய்கிறான்.

____________________ பல தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள்.

____________________ எந்த வேலையையும் எளிதில் செய்ய முடியும்.

ஆதனால் அங்குள்ள அனைவருக்கும் ____________________ மிகவும் பிடிக்கும்.


____________________ முன்னேற்றத்தைக் கண்டு எல்லோரும் அவனைப் பாராட்டினார்கள்.

(2 × 5 புள்ளிகள்)


**வினா 4 : பாடசாலை விடுதி ஒன்றில் தங்கியிருக்கும் நீர், பாடசாலையில் கல்விச் சுற்றுலா ஒன்று செல்வதற்காக உமது தந்தையிடம் அனுமதியும் பணமும் கேட்டு ஒரு கடிதம் எழுதுக.** (15 புள்ளிகள்)

(கடிதம் குறைந்தது 50 சொற்கள் இருக்கவேண்டும்)

**வினா 5: பின்வரும் இரண்டு கோபுரங்களையும் அழகாக கட்டி முடியுங்கள்.**




1. அழைக்கும் சொல்
2. உடல் உறுப்பு
3. இதனால் உள்ளே போகலாம் வரலாம்
4. இதில் ஏழு நிறங்கள்
5. இது ஒரு காய்
6. இத அதன் பழம்
7. வாழைகள் நிறைந்த தோட்டம்
8. மனிதனின் இளமைப் பருவம்




1 அரைத அரிசி

2 அம்மாவின் சகோதரன் உமக்கு என்ன முறை

3 வருடத்தில் இது பன்னிரண்டு

4 கல்வி கற்பவன்

5 இது ஒரு பழம்

6 மாடு பூட்டிய வண்டி

7 இது வருடத்தின் கடைசி மாதம்

8 மாங்காயில் செய்த ஊறுகாய்

**வினா 6: பினவரும் தலைப்பு ஒன்றைத் தெரிவு செய்து 100 சொற்களுக்கு குறையாது கட்டுரை எழுதுக.**

நீர் விரும்பிக் கொண்டாடும் ஒரு பண்டிகை.

உமது தமிழ்ப் பாடசாலைக் கலை விழா

பொய் சொல்லக் கூடாது எனப்தை வலியுறுத்தும் ஒரு கதை

(20 புள்ளிகள்)

( 20 புள்ளிகள் )

தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
**Tamil Study Centre, Homebush Inc.**
P.O.Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au

# அரையாண்டுப் பரீட்சை 2011

வகுப்பு: 7 திகதி:- 18-06-2011 நேரம்: 2 ½ மணித்தியாலம்

ஆசிரியர்: திருமதி சா. விஜயநாதன்

**மாணவர் பெயர்**:-

1. **பின்வரும் உரைப்பகுதியை வாசித்து கீழ்வரும் வினாக்களுக்க விடை தருக:** (20 புள்ளிகள்)

முல்லைக்கொடிக்கு தேர் கொடுத்த வள்ளல்

பாரி பறம்பு நாட்டு மன்னன். அறிஞர்களையும் வறியோர்களையும் ஆதரித்து மகிழும் அரும் பண்பாளன். குறுநில மன்னனாகிய பாரி பெருங் கொடை வள்ளலாக விளங்கினான். பாரியின் உள்ளத்தில் அன்பும் அறமும் செழித்து வளர வளரப் பறம்புநாட்டிலும் வளம் பல நிரம்பி மலர்ந்தன. வள்ளல் பாரியின் அன்பு நிழலில் வாழ்ந்த பறம்புநாட்டு மக்கள் அல்லல் என்பதை அறியாராய் அறத்தைக் காத்து ஆக்கம்பெ பெருக்கினார்கள். ஈந்துவக்கும் பாரியின் இனிய பண்புகள் நல்லிசைப் புலவராகிய கபிலரின் உள்ளத்தை அள்ளிவிட்டன. புலமை நலம் படைத்த கபிலர் பாரியின் புகழைப் பாடிப் பாடி ஆவி தளிர்த்தார்.

பாரி பயன்கருதாது கொடுக்கின்ற பண்பாளன் என்பதை உணர்ந்த கபிலர் மிகவும் மகிழ்ந்தார். மாரி இந்த உலகத்தை வாழ்விப்பதுபோலவே பாரியும் வாழ்விக்கின்றான். மாரியினால் மக்களும் விலங்கினங்களும் மட்டுமல்ல, புல்லும் கொடியும் மரமும் தளிர்த்துப் பூத்துக் காய்த்துக் கனிந்து பயன் தருகின்றன. பாரியும் மக்களுக்கு மட்டும் வாரி வழங்கிப் பாவும் பாராட்டும் பெறுகின்ற அளவில் நிற்பவன் அல்லன். கொடுத்தால் புகழ் பெருகும் என்ற எண்ணத்துடன் கொடுக்கின்ற வாணிகக் கொடையாளன் அல்லன். பிற உயிர்கள் படுகின்ற அல்லலை கண்டு ஆவி உருகிக் கொடுக்கும் அருளாளன்.

ஒருநாள் பாரி தேரில் ஏறி ஊரின் வளங்காணச் சென்றான். செல்லும் வழியில் ஒரு முல்லைக் கொடியை நோக்கினான். முல்லைக் கொடியின் துன்ப நிலையை உணர்ந்து, உள்ளம் உருகினான். தேரில் நின்று இறங்கி, நேரில் சென்று முல்லைக் கொடியின் வாட்டத்தை நீக்க என்ன வழி என்று நினைத்தான். கொழுவிப் படர்ந்து தளைத்து மலரக் கொழுகொம்பில்லாமல் முல்லைக் கொடி குழைந்து கிடந்த நிலையை நினைக்க நினைக்க அவனின் உள்ளம் நீராய் உருகியது. உடனே ஒரு முடிவுக்கு வந்தான். தான் ஏறிவந்த தேரைக் கொண்டுவந்து முல்லைக் கொடியின் பக்கத்தில் நிறுத்தினான். ஆராத அன்புடன் அந்த முல்லைக் கொடியை அணைத்துத் தூக்கித் தேரில் படர விட்டான். முல்லைக் கொடி தேரின்மேல் படரும் காட்சியைக் கண்டான். பச்சைக் குழந்தை தன் தளிர்க்கையால் தாயின் முகத்தைத் தடவும் பொழுது தாயின் உள்ளம் தழைத்தல் போன்ற மகிழ்ச்சியுடன் வள்ளல் பாரி விளங்கினான். மகிழ்ந்த பாரி தான் மன்னன் என்பதையும் மறந்து, தேரில் வந்த வீதி வழியே காலால் நடந்து தன் அரண்மனையை அடைந்தான்.

*(நன்றி: தன்னேர் இலாத தமிழ் - வித்துவான் க வேந்தனார்)*

1. பாரி மன்னன் எப்படியான பண்பைக் கொண்டவன்?

_______________________________________________

2. பாரி மன்னனின் புகழைப்பாடிய புலவர் யார்?

_______________________________________________

3. மழையினால் என்ன நன்மை கிடைக்கின்றது என்று மேற்கண்ட உரைப்பகுதியில் குறிப்பிடப்படுகின்றது?

_______________________________________________

4. பாரில் தேரில் ஏறி ஊர் வளம் காணச் சென்ற போது ஏன் கவலையடைந்தான்?

_______________________________________________

5. கோடிட்ட இடங்களை நிரப்புக:
   ஆராத அன்புடன் அந்த .....................அணைத்துத் தூக்கித் தேரில் படர விட்டான்.

**2. பின்வரும் சொற்களை வைத்து நான்கு சொற்களுக்குக் குறையாமல் வசனம் எழுதுக.** (20 புள்ளிகள்)

1. உணவு

___

2. மாணவர்

___

3. இயற்கை

___

4. மொழி

___

5. விளையாட்டு

___

6. நண்பர்

___

7. தொலைக்காட்சி

___

8. புத்தாண்டு

___

9. பெற்றோர்

___

10. பாடசாலை

___

3. **சிட்னியில் தமிழர் வாழ்வு என்பது பற்றி வேறொரு நாட்டிலுள்ள உமது உறவினர் ஒருவருக்கு 100 சொற்களுக்குக் குறையாமல் ஓர் கடிதம் எழுதுக.**
( 20 புள்ளிகள்)

4. **கீழ்வரும் கதையை 70 சொற்களுக்குக் குறையாமல் பூர்த்தி செய்க.** (15 புள்ளிகள்)

விவசாயி ஒருவன் காட்டு வழியாக வெளியூருக்குச் சென்று கொண்டிருந்தான். வழியில் சிங்கம் ஒன்று கூட்டில் சிக்கிக் கொண்டிருந்ததைக் கண்டான். கூண்டில் இருந்த சிங்கம், "ஐயா! என்னைக் காப்பாற்றுங்கள்" அலறியது.

- - - - - - - - - - - - - - - -

5. **பின்வருவனவற்றுள் ஒன்றினைத் தெரிவு செய்து 100 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.** (25 புள்ளிகள்)

1. எனது வாழ்க்கையில் மறக்கமுடியாத சம்பவம்.
2. நான் கண்ட கனவு

தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
**Tamil Study Centre, Homebush Inc.**
P.O.Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au

# அரையாண்டுப் பரீட்சை 2011

வகுப்பு: 8 திகதி:- 18-06-2011 நேரம்: 2 ½ மணித்தியாலம்

ஆசிரியர்: திருமதி மாலினி சோமாஸ்கந்தன்

**மாணவர் பெயர்**:-

______________________________

1) **கீழே தரப்பட்ட பகுதியை வாசித்து தரப்பட்ட வினாக்களுக்கு முழு வசனத்தில் விடை எழுதுக.** (25 புள்ளிகள்)

மக்களுக்கு மிகவும் பயன்படும் மரங்களில் யூக்கலிப்டஸ் மரமும் ஒன்று. இம்மரம் அவுஸ்திரேலியாக் கண்டத்தில்தான் தொடக்கத்தில் காணப்பட்டது. அவுஸ்திரேலியா கண்டுபிடிக்கப்பட்ட பிறகுதான் இந்த மரத்தைப்பற்றி மற்ற நாட்டினரும் அறிந்தனர். இன்று உலகத்தின் பல்வேறு நாடுகளிலும் வளர்க்கப்படும் மரமாக இந்த யூக்கலிப்டஸ் மரம் **திகழ்கிறது**. அவுஸ்திரேலியர்கள் இதைக் கோந்து மரம் என்று அழைக்கிறார்கள்.

யூக்கலிப்டஸ் மரத்தில் நூற்றுக்கணக்கான வகைகள் உண்டு. சிலவகை யூக்கலிப்டஸ் மரங்கள் அடர்ந்து தழைத்துப்படரும். வேறு சில மரங்கள் நேராகவும் உயரமாகவும் வளரும். இம்மரத்தின் கன்றுகளை நட்டால் ஓர் ஆண்டில் சுமார் நான்கு மீட்டர் உயரம் வளர்ந்து விடும். இம்மரம் செழித்து வளர்வதற்கு மிகுதியான தண்ணீர் வேண்டும். ஆகையால் இதைப் பெரும்பாலும் சதுப்பு நிலங்களில் பயிரிடுவார்கள். கொசுக்கள் உற்பத்தியாகும் சதுப்பு நிலங்களிலுள்ள நீரை எடுத்துக் கொண்டு விடுவதால் மலேரியாவை **ஒழிப்பதற்கு** இம்மரங்கள் பெருமளவு துணை புரிகின்றன.

இம்மரத்தின் இலைகளிலிருந்து இளம் மஞ்சள் வண்ணத்தில் ஒருவகை எண்ணெய் கிடைக்கின்றது. இதுவே நீலகிரித் தைலம் ஆகும். இதைத் தலைவலித் தைலம் என்றும் அழைப்பர். இந்தியாவில் ஆங்கிலேயர் முதன்முதலில் நீலகிரி மலையில் இதைப் பயிரிட்டனர். இதனால் நீலகிரித் தைலம் என்ற பெயர் உண்டாயிற்று. மூக்கடைப்பு, தசைப்பிடிப்பு, உடல் **நோவு** போன்ற பலநோய்களுக்கு இந்த எண்ணெய் **வியத்தகு** பலனைத் தருகின்றது.

1. யூக்கலிப்டஸ் மரம் முதன்முதலில் எங்கு காணப்பட்டது?

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

2. இம்மரம் நன்றாக வளர்வதற்குத் தேவையானது எது?

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

3. மலேரியாவை ஒழிப்பதற்கு இம் மரங்கள் எவ்வாறு உதவுகின்றன?

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

4. யூக்கலிப்டஸ் எண்ணெய்க்கு நீலகிரித் தைலம் என்னும் பெயர் உண்டாவதற்குக் காரணம் என்ன?

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

5. நீலகிரித் தைலத்தை மக்கள் எதற்கு பயன் படுத்துகிறார்கள்?

-----------------------------------------------------------------------------------------------------------------------------------

6. பொருள் எழுதுக.

திகழ்கிறது ----------------------------------------

ஒழிப்பதற்கு ----------------------------------------

நோவு ----------------------------------------

வியத்தகு ----------------------------------------

**2) பின்வரும் சொற்களைக் கொண்டு ஐந்து சொற்களுக்குக் குறையாத வாக்கியங்களை அமைக்கவும்.** (20 புள்ளிகள்)

1. நுழைவுச்சீட்டு

----------------------------------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------------------------------

2. கணக்காளர்

----------------------------------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------------------------------

3. கல்லூரிக்கீதம்

----------------------------------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------------------------------

4. மருத்துவ நிலையம்

----------------------------------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------------------------------

5. கலைவிழா

----------------------------------------------------------------------------------------------------

----------------------------------------------------------------------------------------------------

6. அறிவிப்பாளர்

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

7. விளம்பரம்

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

7. அஞ்சற்காரன்

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

8. மாறுவேடம்

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

10. கைத்தொலைபேசி

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

**3. கீழ்வரும் அட்டவணையில் தரப்பட்ட தகவல்களை அடிப்படையாகக் கொண்டு அவுஸ்திரேலியத் தமிழ் வானொலி ஒன்றில் அறிவிப்பதற்கு ஏற்ற வடிவத்தில் பிறந்த நாள் வாழ்த்து ஒன்றை எழுதுக.** (15 புள்ளிகள்)

பிறந்த நாள் கொண்டாடுபவர்: கண்ணன் வயது: 13

பெற்றோர் தந்தை: குமரன் தாய்: வள்ளி

கொண்டாடும் இடம்: ஹோம்புஷ் ஆரம்பப் பாடசாலை மண்டபம், ஹோம்புஷ்

காலம்: 26-07-11 நேரம்: மாலை 4:30 மணி

வாழ்த்துபவர்கள்: பெற்றோர், அக்கா, அண்ணா, தம்பி, மாமா, மாமி, பாட்டா, பாட்டி, உற்றார், உறவினர்கள்

வாழ்த்தில் இடப்பெறக் கூடிய சொற்கள்: பலகலையும் கற்று ------- , பல்லாண்டு காலம் ------- சீரும் சிறப்பும் ------

**4. எட்டாம் வகுப்பில் கல்வி கற்கும் நீர் குயீன்ஸ்லாந்து (Queensland) மாநிலத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு உதவி செய்யும் வகையாக நிதி திரட்டுவதற்கு எமது தமிழ்ப் பாடசாலை சார்பாக ஒரு கலைநிகழ்ச்சியொன்று வைப்பதற்கு அதிபரின் அனுமதி கோரி ஒரு கடிதத்தை 80 சொற்களுக்குக் குறையாமல் எழுதுக.**
(15 புள்ளிகள்)

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

5. **பின்வருவனவற்றுள் ஒன்றினைத் தெரிவு செய்து 125 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.** (25 புள்ளிகள்)

1. எனது வாழ்க்கையில் மறக்கமுடியாத சம்பவம்.
2. புலம்பெயர்ந்த நாடகளில் தமிழர் பண்பாடு

தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

**Tamil Study Centre, Homebush Inc.**
P.O.Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au

# அரையாண்டுப் பரீட்சை 2011

வகுப்பு: 9 திகதி:- 18-06-2011 நேரம்: 2 ½ மணித்தியாலம்

ஆசிரியர்: திரு ச. தேவராசா

**மாணவர் பெயர்**:-

1. பின்வரும் சொற்களைப் பயன்படுத்தி ஆறு சொற்களுக்குக் குறையாத வாக்கியங்கள் எழுதுக. (20 புள்ளிகள்)

தமிழ்மொழி

வணக்கம்

மரியாதை

சிரித்தார்கள்

விருப்பம்

அழுதோம்

விளையாட்டு

நீந்துகின்றார்கள்

மகிழ்ச்சி

தமிழ்ப் பாடசாலை

2. பின்வரும் தனிவாக்கியங்களை தொடர் வாக்கியமாக்குக. (15 புள்ளிகள்)

காலை ஆறு மணிக்கு நித்திரை நீங்கி எழுந்தேன்.
குளியல் அறைக்குச் சென்றேன்.
காலைக் கடன்களை முடித்தேன்.
நன்றாகக் குளித்தேன்.
தமிழ்ப் பாடத்தைப் படித்தேன்.
காலை உணவு உண்டேன்.
தமிழ்ப் பாடசாலையை நோக்கி நடந்தேன்.
தமிழ்ப் பாடசாலையை அடைந்தேன்.
தமிழ்மொழி வாழ்த்து, தமிழ்க் கல்வி நிலையக் கீதம் என்பவற்றைப் பாடினேன்.
அதிபர் கூறிய அறிவுரைகளைக் கேட்டேன்.
வகுப்பறைக்குச் சென்றேன்.
ஆசிரியருக்கு வணக்கம் கூறினேன்.
பாடங்களை நன்றாகப் படித்தேன்.
ஆசிரியரிடம் நல்ல பெயர் வாங்கினேன்.
மகிழ்ச்சியுடன் வீடு திரும்பினேன்.

3. பின்வரும் பந்திகளை வாசித்து, அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக. (15 புள்ளிகள்)

உலகிலுள்ள நாடுகளை ஆட்சிமுறையின் அடிப்படையில் சனநாயக நாடுகள், பொதுவுடமை நாடுகள், முடியாட்சி நாடுகள், இராணுவ ஆட்சி நாடுகள் என்று நான்காக வகைப்படுத்தலாம்.

"மக்களால் மக்களுக்காக ஏற்படுத்தப்பட்ட மக்களுடைய அரசாங்கம் சனநாயகம் ஆகும்" என்று முன்னாள் அமெரிக்க சனாதிபதி ஆபிரகாம் லிங்கன் கூறினார். சனநாயகம் என்பதைப் பிரித்து எழுதினால் சனம் + நாயகம் என்று அமையும். சனம் என்பதன் பொருள் மக்கள். நாயகம் என்பதன் பொருள் தலைமை. ஆனால் சனநாயக ஆட்சிமுறையில் மக்கள் நேரடியாக ஆட்சி நடாத்துவதில்லை. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மூலமே ஆட்சி நடாத்தப்படுகின்றது. இதனால் சனநாயக நாடுகளில் வாக்குரிமை என்பது முக்கியமானதாக விளங்குகின்றது. தேர்தல் காலங்களில் மக்கள் தாம் விரும்புகின்ற வேட்பாளர்களுக்கு அல்லது கட்சிக்கு வாக்களிக்கும் உரிமை வாக்குரிமை எனப்படுகின்றது. சனநாயகத்தின் வேறொரு முக்கியமான பண்பு பல கட்சிகள் இருத்தலாகும். அவுஸ்திரேலியா, அமெரிக்கா, இலங்கை, இந்தியா போன்ற நாடுகள் சனநாயக நாடுகளாகும்.

ஒரு கட்சியைச் சேர்ந்த குழுவினால் நாட்டின் நிர்வாகம் நடத்தப்பட்டால் அது பொதுவுடமை நாடாகும். இங்கு ஒரு கட்சியே இருக்கும். மக்களுக்கு வாக்களிக்கும் உரிமை கிடையாது. சீனா, கியூபா போன்றன பொதுவுடமை நாடுகளாகும். ரஷ்யா, செக்கோசிலவேக்கியா, ருமேனியா, ஹங்கேரி, போலந்து போன்ற நாடுகள் பொதுவுடமை நாடுகளாக இருந்து சனநாயக நாடுகளாக மாறியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். "துப்பாக்கி முனையிலேதான் அரசியல் அதிகாரம் பிறக்கின்றது" என்ற சீனாவில் பொதுவுடமைக் கட்சியை ஆரம்பித்து வைத்த முன்னாள் சீன அதிபர் மவோசேதுங்கின் கொள்கையை, தற்போதும் பின்பற்றுகின்ற நாடாக சீனா விளங்குகின்றது.

மன்னராட்சி நடைபெறுகின்ற நாடுகள் முடியாட்சி நாடுகள் எனப்படும். பரம்பரை பரம்பரையாக அரச குடும்பத்தில் பிறந்தவர்களால் நிர்வகிக்கப்படும் நாடுகள் இவையாகும். இதனால் இங்கும் மக்களுக்கு வாக்குரிமை இல்லாது போய்விடுகின்றது. சவூதி அரேபியா, அபுதாபி, புரூனே போன்ற நாடுகள் முடியாட்சி நாடுகளுக்கு உதாரணங்களாகும். பெரும்பாலான நாடுகள் ஆரம்பத்தில் முடியாட்சி நாடுகளாகவே இருந்தன.

மக்களாட்சி நடைபெற்ற நாட்டில் இராணுவம் ஆட்சியைக் கைப்பற்றி, இராணுவத் தளபதி நாட்டை நிர்வகித்தால் அது இராணுவ ஆட்சி நடைபெறுகின்ற நாடாகும். பிஜி, லிபியா போன்றன இதற்கு உதாரணங்களாகும். லிபியாவில் இராணுவ ஆட்சியை முடிவுக்குக் கொண்டுவந்து, மக்களாட்சியை மலரச் செய்வதற்கான போராட்டம் தற்போது நடைபெறுவது குறிப்பிடத்தக்கதாகும்.

1. உலகிலுள்ள நான்கு ஆட்சி முறைகளையும் எழுதுக. (1 புள்ளி)

______________________________

______________________________

2. சனநாயகம் என்பதன் வரைவிலக்கணம் என்ன? (1 புள்ளி)

______________________________

______________________________

3. பொதுவுடமை நாடுகள் என்றால் என்ன? இரண்டு நாடுகளை உதாரணங்களாக எழுதுக. (1 புள்ளி)

4. சனநாயக ஆட்சி முறையில் காணப்படும் இரண்டு முக்கியமான அம்சங்கள் எவை? (1 புள்ளி)

5. இராணுவ ஆட்சி என்றால் என்ன? ஒரு நாட்டை உதாரணமாக எழுதுக. (1 புள்ளி)

6. சனநாயக அமைப்பையும் பொதுவுடமை அமைப்பையும் ஒப்பிட்டு இரண்டு வாக்கியங்கள் எழுதுக. (1 புள்ளி)

7. நீங்கள் வாசித்த விடயத்திற்குப் பொருத்தமான ஒரு தலையங்கம் எழுதுக. (1 புள்ளி)

8. முடியாட்சி நாடுகளை சர்வாதிகார நாடுகள் என்று கூறலாமா? ஏன்? (2 புள்ளிகள்)

9. நீங்கள் வாழ்கின்ற அவுஸ்திரேலியாவில் எந்த ஆட்சிமுறை நிலவுகின்றது? விளக்குக. (3 புள்ளிகள்)

10. நான்கு ஆட்சி முறைகளிலும் உங்களுக்கு விருப்பமானது எது? காரணம் எழுதுக. (3 புள்ளிகள்)

4. கீழே எழுதப்பட்டுள்ள நிகழ்வை தொடர்ந்து 70 சொற்களுக்குக் குறையாமல் எழுதி நிறைவு செய்க. (15 புள்ளிகள்)

விடுமுறையின்போது நானும் எனது பெற்றோரும் தமிழ்நாட்டிற்குச் சென்றோம். அங்கே பிரசித்தி பெற்ற கோயில்களுக்குச் சென்று இறைவனை வணங்கினோம். புதிய தமிழ்த் திரைப்படங்களைப் பார்த்து மகிழ்ந்தோம். பலவகையான சுவையான உணவுவகைகளை உண்டு மகிழ்ந்தோம். பின்பு கிராமத்தில் உள்ள எனது தந்தையாரின் உறவினர் வீட்டிற்குச் சென்றோம். பச்சைப்பசேலென்று காட்சியளித்த தோட்டங்களும், வயல்களும் எனது மனதைக் கொள்ளை கொண்டன. ஒருநாள் அப்பா இன்று காட்டுக்கு வேட்டைக்குச் செல்லப்போகின்றோம், காடு ஆபத்துக்கள் நிறைந்தது எனவே நீ அம்மாவுடன் இரு, நாங்கள் போய்வருகின்றோம் என்றார். நானும் வருகின்றேன் என்று அடம்பிடித்தேன். சரி கவனமாகப் போய் வா என்று அம்மா பச்சைக் கொடி காட்டினார். நாட்டில் எனக்கு ஏற்படப்போகும் திகில் அனுபவத்தை அறியாமல் துள்ளிக்குதித்து மகிழ்ச்சியுடன் காட்டைநோக்கிச் சென்று கொண்டிருந்தேன்.

5. அவுஸ்திரேலியாவில் இன்பத் தமிழ் ஒலி, அவுஸ்திரேலியத் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் ஆகிய இரண்டு வானொலி நிலையங்களும் 24 மணி நேர ஒலிபரப்புச் சேவையை தமிழ் மக்களுக்கு வழங்கி வருகின்றன. அவற்றில் ஒன்றின் நிர்வாக இயக்குனருக்கு அவர்கள் செய்து வரும் சேவையைப் பாராட்டி, 80 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கடிதம் எழுதுக. (15 புள்ளிகள்)

6. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து 150 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை எழுதுக. (20 புள்ளிகள்)

- எனது வாழ்வில் மறக்க முடியாத நாள்
- ஹோம்புஷ் தமிழ்ப் பாடசாலையின் கலைவிழா 2011.

தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
**Tamil Study Centre, Homebush Inc.**
P.O.Box 4019, Homebush NSW 2140
www.tsch.org.au

# அரையாண்டுப் பரீட்சை 2011

வகுப்பு: 10 திகதி:- 18-06-2011 நேரம்: 2 ½ மணித்தியாலம்

ஆசிரியர்: திருமதி புருஷோத்தமர்

**மாணவர் பெயர்**:-

**வாசித்தபின் கீழுள்ள வினாக்களுக்கு விடை அளிக்கவும்** (20 புள்ளிகள்)

இற்றைக்கு ஏறத்தாழ இருநூறு ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த, திரிகூடராசப்பக் கவிராயர் என்ற புலவரால் இயற்றப்பட்டது திருக்குற்றாலக் குறவஞ்சி. கவிராயர் தென்பாண்டி நாட்டிலே உள்ள மேலகரம் என்ற ஊரில் வாழ்ந்தவர். இவர் மிகச் சிறந்த புலவராவார்.

குற்றாலக் குறவஞ்சி மிகவும் அருமையான சந்தங்களைக் கொண்ட பாடல்களால் அமைந்த நூல். வெண்பா, கலிப்பா, விருத்தப்பா, ஆசிரியப்பா, கட்டளைக் கலித்துறை என்னும் பலவகைகளைக் கொண்டு, பல்வேறு இராகங்களுக்கு அமைவான பண்ணிசைப் பாடல்களாகக் குற்றாலக் குறவஞ்சிப் பாடல்கள் அமைந்துள்ளன.

குற்றாலக் குறவஞ்சிப் பாடல்களின் கருத்துச் செறிவும் ஓசைநயமும் படிப்பவரின் இதயங்களைக் கொள்ளை கொள்ளும். கேட்போரின் செவிகளில் தேனாகப் பாயும். இயற்றமிழின் செழுமையையும், இசைத்தமிழின் இனிமையையும், நாடகத் தமிழின் எழிலினையும் ஒருங்கே காட்டும் முத்தமிழ்க் காவியம்.

குற்றாலக் குறவஞ்சிப் பாடல்கள் மிகவும் எளிதான சொற்களால் ஆனவை. எவரும் படித்து, கேட்டு இன்புறத் தக்கன. அதனால் காலம் காலமாக சாதாரண மக்களால் அன்றாடம் பாடப்பட்டு வருகின்றன.

குற்றாலக் குறவஞ்சிப் பாடல்கள் அபிநயப்பாடல்களாகப் பயன்படுத்தப்படுகின்றன. இப்பாடல்களுக்கு நடனங்கள் அமைக்கப்பட்டு மேடைக் கலைவடிவங்களாக ஆடப்படுகின்றன. இன்றும் பாடசாலை விழாக்களிலும், தமிழ்க் கலைவிழாக்களிலும், நடன நிகழ்ச்சிகளிலும் குற்றாலக் குறவஞ்சிப் பாடல்கள் இடம் பெறுகின்றன.

குற்றாலக் குறவஞ்சி சைவசமயச் சார்பான நூல். பண்டைய வரலாற்று நிகழ்வுகள், திருவிளையாடற் புராணம் பெரிய புராணம் என்பவற்றிலுள்ள கதைகள் என்பனவெல்லாம் ஆங்காங்கே இடம் பெறுகின்றன. எழிலான இயற்கைக் காட்சிகளைச் சுவையோடு சொல்லும் குற்றாலக் குறவஞ்சி மலைவாழ் மக்களின் வாழ்வியல் முறைகளை வெளிப்படுத்தி நிற்கிறது.

இப்பாடல்களில் குற்றால மலையின் அழகைப் பருகலாம். குறத்திப் பெண்களின் அழகைக் காணலாம். மனிதக் காதலின் மாண்பினையும், தெய்வத்தின் மேல் கொள்ளுகின்ற காதலின் சிறப்பையும் உணரலாம்.
(நன்றி: தென்றல்)

1. திரிகூடராசப்பக் கவிராயர் யார்? (2 புள்ளிகள்)

___

___

2. திருக்குற்றாலக் குறவஞ்சியில் அமைந்த பாவகைகள் எவை? (2 புள்ளிகள்)

------------------------------------------------------ ------------------------------------------------------

------------------------------------------------------ ------------------------------------------------------

3. குற்றாலக் குறவஞ்சி ஏன் முத்தமிழ்க் காவியம் எனப்படுகின்றது? (4 புள்ளிகள்)

4. குற்றாலக் குறவஞ்சிப் பாடல்களின் சிறப்பு என்ன? (6 புள்ளிகள்)

5. குற்றாலக் குறவஞ்சியை நீர் படித்தால் எவற்றையெல்லாம் அறிந்து கொள்ள வாய்ப்புண்டு? (6 புள்ளிகள்)

**எழுத்து:**

1. கடிதம் எழுதுதல்

உமது குடுப்பத்தினர் அவசியமாக அவசரமாக வெளிநாடு (இலங்கை அல்லது இந்தியா) செல்ல வேண்டியுள்ளது. அதனால் நீர் உமது பாடசாலை அதிபரிடம் விடுமுறை கோரி கடிதம் ஒன்று எழுதுக. (60-75 சொற்கள்)

(விண்ணப்பக் கடித ஒழுங்கு அமைப்பு பேணப்பட வேண்டும்.) (15 புள்ளிகள்)

2. கட்டுரை எழுதுதல்

பின்வரும் தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 150-175 சொற்களில் கட்டுரை எழுதுக. (20 புள்ளிகள்)

1. “பாடசாலைக் கல்வியோடு பகுதிநேர வேலையையும் மாணவர்களால் திறம்படச் செய்ய முடியும்” என்ற தலைப்பில் உமது பாடசாலை ஒன்றுகூடலில் நீர் ஆற்ற இருக்கும் பேச்சினை எழுதுக.
2. “தாய்மொழி என்பது மிகப் பெறுமதி வாய்ந்தது. அதனைப் பணப் பெறுமதியுடனோ தொழில் தகைமையுடனோ இணைத்துப் பார்ப்பது பொருத்தமற்றது. நாம் எமது மொழியான தமிழ் மொழியைக் கற்போம்” என்ற கருத்தினை வலியுறுத்தி உமது அபிப்பிராயங்களைத் தொகுத்து கட்டுரை எழுதுக.
3. “பல்கலாசார சமூகத்தில் நமது வாழ்வும் நமது பண்பாடும்” என்ற தலைப்பில் உமது பாடசாலை மலரில் வெளியிடுவதற்காகக் கட்டுரை ஒன்று வரைக.

கீழே கொடுக்கப்பட்டுள்ள சொற்களைக் கொண்டு பந்தி அமைக்கவும். (60 சொற்களுக்குக் குறையாமல் இருக்கவேண்டும்)

குரல் இனிமை, உச்சரிப்புத் தெளிவு, சமயோசிதம், நிகழ்கால செய்திகளை வாசித்து அறிதல், மொழிபெயர்ப்புத் திறன், உரையாடும் கலை, அறிவிப்புப் பணிகள், விளம்பரங்கள், திரைப்படங்கள், சின்னத்திரை, அடிப்படைப் பயிற்சி, சான்றிதழ், உயிரோட்டத்துடன் பேசும் முறை, பேச்சு மொழிக்கான இலக்கணம், நிகழ்ச்சித் தயாரிப்புத் திறன், செய்தி வாசிப்புப் பயிற்சி, வானொலி, தொலைக்காட்சி, மேடை நிகழ்ச்சிகள்.

கீழே தரப்படும் தனி வாக்கியங்களை இணைத்து தொடர் வாக்கியம் அமைக்கவும். (12 புள்ளிகள்)

1. பள்ளி முதல்வர்கள் வந்தார்கள்.
2. கல்வித்துறை அதிகாரிகள் வந்தனர்.
3. அனைவரும் மேடையில் அமர்ந்தனர்.
4. குறித்த நேரத்தில் விழா ஆரம்பித்தது.
5. தேசிய கீதம் இசைக்கப்பட்டது.
6. பள்ளி மாணவ மணிகளின் வாத்திய இசைக்குழுவின் இசையுடன் விழா தொடங்கியது.
7. பெற்றோர் தம் குழந்தைகளின் சாதனை கண்டு மகிழ்ந்தனர்.
8. வரவேற்புரை இடம் பெற்றது.
9. பிரதமவிருந்தினர் உரையாற்றினார்.
10. பின்பு ஒவ்வொரு மாணவ மாணவியரைப் பெயர் சொல்லி அழைத்தனர்.
11. சான்றிதழ்கள் வழங்கினர்.
12. கரகோசம் வானைப் பிளந்தது.

**கேட்டுக் கிரகித்தலும் பதிலளித்தலும்.**

பந்தியைக் கேட்டபின் வினாக்களுக்கு விடை எழுதவும். (15 புள்ளிகள்)

1. நீர் கேட்ட விபரம் எதனைப் பற்றி கூறுகிறது? (1 புள்ளி)

2. அது எப்போது கட்டப்பட்டது? (1 புள்ளி)

3. மூலக்கட்டுமானம் எப்படி அழைக்கப்படுகிறது? (1 புள்ளி)

4. இன்றுள்ள வடிவில் இதனை விரிவாக்கியவர் யார்?

   எப்போது விரிவாக்கினார்? (2 புள்ளிகள்)

5. அவர் இதற்கு வழங்கின பெயர் என்ன? (1 புள்ளி)

6. பூ முகத்தில் எத்தனை பூக்கள் உள்ளன? (1 புள்ளி)

7. பூ முகத்தை அலங்கரிக்கும் நாற்காலியை யார் வழங்கினார்கள்? (1 புள்ளி)

8. இங்குள்ள உணவுக்கூடத்தின் சிறப்பு என்ன? (2 புள்ளிகள்)

9. எல்லாமாக எத்தனை ஏக்கரில் இப்பகுதி பரந்து விரிந்து காணப்படுகிறது? (1 புள்ளி)

10. இந்திர விலாஸம் என்பது என்ன? (1 புள்ளி)

11. இங்குள்ள அருங்காட்சியகத்தில் எவற்றைப் பார்க்கலாம்? ( 3 புள்ளிகள்)

------------------------------------------------------ -------------------------------------------------------

------------------------------------------------------ -------------------------------------------------------

------------------------------------------------------ -------------------------------------------------------

**பந்தியைக் கேட்டபின்பு அட்டவணையைப் பூர்த்தி செய்க. (10 புள்ளிகள்)**

| | | |
|---|---|---|
| 1 | இப்பாடலின் நோக்கம்<br><br>(2 புள்ளிகள்) | •<br><br>• |
| 2 | அது இடம்பெற்ற சந்தர்ப்பம்<br><br>(1 புள்ளி) | |
| 3 | விழாவில் ஏற்பட்டதாக சங்கர் கூறும் குறைபாடுகள்<br><br>(3 புள்ளிகள்) | •<br>•<br>• |
| 4 | இருவரும் மிக நெருங்கிய நண்பர்கள். ஆதாரம்-<br><br>(4 புள்ளிகள்) | •<br>•<br>•<br>• |